# அஞ்சறைப் பெட்டி

(கவிதைகள்)



ப.சொக்கலிங்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அஞ்சறைப் பெட்டி *(கவிதைகள்)* |
| ஆசிரியர் | : | **ப. சொக்கலிங்கம்**<br>62, விக்டோரியா கார்டன்ஸ்<br>20, ஜவஹர்லால் நேரு சாலை<br>கோயம்பேடு, சென்னை - 600 107.<br><br>99400 84290<br>chockalingam66@gmail.com |
| முதல் பதிப்பு | : | ஜூன் 2021 |
| அச்சிட்டு வெளியிடுபவர் | : | ப. சொக்கலிங்கம் |
| ஆலோசனை | : | சூ.க. முரளி குமார் |
| ஓவியங்கள் | : | சொ. தீப்தி |
| நூல் கிடைக்குமிடம் | : | ப. சொக்கலிங்கம்<br>62, விக்டோரியா கார்டன்ஸ்<br>20, ஜவஹர்லால் நேரு சாலை<br>கோயம்பேடு, சென்னை - 600 107. |
| வடிவமைப்பு | : | திரு. சி. பிரேம் ஆனந்த்<br>முத்து டிசைன்ஸ்<br>மதுரை - 625 001.<br>94420 84400 |
| அச்சாக்கம் | : | முத்து டிசைன்ஸ், மதுரை-1. |
| விலை | : | ரூ./- |
| தாள் | : | 80 ஜி எஸ் எம் |
| பக்கங்கள் | : | 96 பக்கங்கள் |

# சமர்ப்பணம்

"மக்கள் சேவையே மகேசன் சேவை"
எனும் கூற்றுக்கேற்ப
தங்கள் வாழ்நாள் முழுவதும்,
பிறருக்கு பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்து
விண்ணுலகு அடைந்த என் தந்தைவழித் தாத்தா
ஆழ்வார்குறிச்சி **டாக்டர் அ.சொக்கலிங்கம்**,
பாட்டி **திருமதி சொ.காந்திமதி**
அவர்களுக்கு
இந்த நூல் சமர்ப்பணம்

# கவிதைகளாய் ரசனைகள்

நம்மைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளை, நாம் கூர்ந்து கவனித்து, ரசிக்கும் போது, தன்னிச்சையாய், நம்முள் துவங்கும் எண்ண ஓட்டங்கள், மனதிலே அசை போட அசை போட, வார்த்தைகளாய் உருமாறி, மேலும் மேலும் மெருகேறி, உற்சாகம் பீறிட, கவிதைகளாய் காகிதத்தில்.

இந்த முறை "**அஞ்சறைப் பெட்டி**" என்ற தலைப்பில், தற்போது உங்கள் கைகளில்.

என்னுடைய முதல் நூல் "**பஞ்சவர்ண கிளி** (கவிதைகள்)" படித்த அன்பர்கள் நேரிலும், அலைபேசி, சமூக வலைத்தளங்கள் மற்றும் கடிதங்கள் வாயிலாகவும் அளித்த ஊக்கமும், உற்சாகமும், எழுதுவதைத் தொடருமாறு கேட்டுக் கொண்டதும், இந்த "**அஞ்சறைப் பெட்டி**" என்ற இரண்டாவது கவிதை நூலை எழுத உத்வேகம் அளித்தன. அன்பர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

நான் பார்த்து, ரசித்த நிகழ்வுகளை இந்த நூலில் ஐந்து அறைகளில் (பாகங்களில்) கொடுத்துள்ளேன்.

கொரோனா, ஊரடங்கு என அசாதாரணமான சூழ்நிலைகளில், பல்வேறு சவால்களையும், இழப்புகளையும் எதிர்கொண்டு வாழ்ந்து வரும் இன்றைய சூழலில், இந்த நூல் தங்களுக்கு ஒரு சோர்வு நீக்கியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

புழக்கத்தில் அதிகம் அல்லாத சில வார்த்தைகளை பரிச்சயப்படுத்த இந்த நூலில் பயன்படுத்தியுள்ளேன்.

அருமையான அணிந்துரை எழுதித் தந்துள்ள மூத்த பத்திரிகையாளர் **திரு."தராசு" ஷ்யாம்** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்

இந்த "**அஞ்சறைப் பெட்டி**" தங்களுக்கு ஒரு நல்விருந்து படைக்கும் என்ற நம்பிக்கையுடன்.

***ப.சொக்கலிங்கம்***<br>
சென்னை<br>
21.06.2021

# அணிந்துரை

## மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம்

நெல்லை சிந்துபூந்துறையில் எங்கள் பாட்டி வீட்டு அஞ்சறைப் பெட்டி மரத்தால் ஆனது. அதில் ஐந்து அறைகள் உண்டு. சமைக்கும் போது தேவையான கடுகு, சீரகம், மிளகு, வெந்தயம், மஞ்சள் போன்ற அத்தியாவசிய மளிகைப் பொருட்களை ஒரே இடத்தில் இருப்பு வைக்க உதவுவதே அஞ்சறைப் பெட்டி.

தமிழர் வாழ்வியலில் ஐந்து என்ற எண் மிக முக்கியம்.

"நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க".. மாணிக்கவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் அருளிச் செய்த சிவபுராணத்தில் இந்த ஐந்தெழுத்து மந்திரம் முதலாவது அடி. ‘‘திருவைந்தெழுத்து’’ என்று இதைப் போற்றுவார்கள்.

இப்படியே **குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்** ஆகிய ஐந்திணை..

**சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி** ஆகிய ஐம்பெருங் காப்பியங்கள்..

**ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா?** என்ற அன்றாடக் கேள்வி..

தமிழர் வாழ்வில் ஐந்தின் பயன்பாடுகள் ஏராளம்.. ஏராளம்.

இப்படி ஐந்து நம்மோடு ஒன்றிக் கலந்த எண். ‘‘அஞ்சறைப் பெட்டி’’ என்று பேச்சு வழக்கில் சொல்லப்பட்டாலும், அது ‘‘ஐந்து அறைகள் கொண்ட பெட்டி’’ என்பது தான் மறை பொருள்.

உண்மையில் அஞ்சறைப்பெட்டி ஒரு மருந்துப் பெட்டகம். அவற்றில் உள்ள பொருட்களில் பல மூலிகைகளே! உணவே மருந்து என்று வாழ்ந்த தமிழ்ச் சமுதாயம் அல்லவா நாம்?

புதுமைப்பித்தனின் ''இலக்கிய மம்ம நாயனார் புராணம்'' என்ற படைப்பில் "யாம் அவ்வாறே செய்வோம்" என்று திருவீதியைப் புறக்கணித்து "ஆணியிட்ட அஞ்சறைப்பெட்டி" மாதிரி அமர்ந்தார் என்று ஒரு உவமை வரும்.

அதை வைத்து முன்னொரு காலத்தில் அஞ்சறைப் பெட்டிக்கு ஆணியிட்டு ஒரே இடத்தில் வைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது என்று உணரலாம். ஆனால் இன்றைய நெகிழி மற்றும் தகர அஞ்சறைப் பெட்டிகளுக்கு ஏழுக்கும் மேற்பட்ட அறைகள் கூட இருக்கின்றன.

ஆனாலும் அருமை நண்பர் கவிஞர் சொக்கலிங்கம் அவர்களின் அற்புதப் படைப்பான "அஞ்சறைப் பெட்டி" கவிதை நூலில் அந்தக் காலத்து மரப் பெட்டி மாதிரி ஐந்து அறைகள். எனவே ஐந்து தலைப்புகள். அவற்றில் ரக ரகமாய்க் கவிதைகள்.

இன்னமும் கிராமத்தையும், விவசாயத்தையும் விடாத அந்தக் காலத்து ஆள் நமது கவிஞர். எனவே இதுவும் பொருத்தம் தான்.

அறைகள் (தலைப்புகள்) தான் வேறு வேறு. ஆனால் சமையலின் நோக்கம் ஒன்றே! சீரிளமைத் திறன் கொண்ட தமிழ்ச் சொற்கள் என்ற மருத்துவப் பொருட்களைப் பயன்படுத்திச் சம கால உலகைப் பண்படுத்தப் பார்க்கும் கவிஞர் சொக்கலிங்கத்தின் பார்வையே அது.

அஞ்சறைப் பெட்டியில் கடுகு, மிளகு, சீரகம், மஞ்சள்தூள், வெந்தயம், உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு, மிளகாய், சீரகம், வெந்தயம், கடுகு, சோம்பு, சுக்கு போன்றவற்றை இல்லத்தின் தேவைகளுக்கேற்ப வைப்பார்கள். இவைகளுடன் சேர்த்து புத்திசாலிப் பாட்டிகள் சிறிதளவு பணத்தையும் மறைத்து வைப்பார்கள். புத்திசாலிப் பேரன்கள் அஞ்சறைப் பெட்டியில் சில்லறைகளைத் துழாவுவதும் உண்டு.

அப்படி ஒளித்து வைக்கப்பட்ட வெள்ளி நாணயம் போல சில கவிதைகள் துள்ளி வந்து மறைபொருளாய் ரகசியம் பேசுகின்றன. புரிய வேண்டிய புத்திசாலிப் பேரன்களுக்குப் புரிந்தால் சரி.

கவிஞர் சொக்கலிங்கம் அவர்களின் படைப்பான "அஞ்சறைப் பெட்டி கவிதை நூல்", உண்மையில், அது ஒரு மருந்துப் பெட்டகம். அன்றாட வாழ்வில் கவிஞர் கண்ட காட்சிகளை வாழ்வியல் மருந்தாக்கித் தந்திருக்கிறார்.

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின்.*

*(குறள் 942)*

**முதலில் உண்டது சீரணமாகிவிட்டதை நன்கு அறிந்து அதன் பிறகு உண்டால், அவன் உடம்புக்கு மருந்து என்று ஒன்று வேண்டியது இல்லை.**

**எனவே கவிஞர் சொக்கலிங்கம் தனது அஞ்சறைப்பெட்டியின் முதல் அறைக்கு "பூங்கா" என்று தலைப்பிட்டு அதிகாலை நடைப் பயிற்சியின் போது கண்டதையும், உணர்ந்ததையும் பதிவு செய்திருக்கிறார். அந்த வகையில் இந்தக் கொரோனா காலத்து நோய்க்கான தீர்வாக ஒரு கவிதை கவிஞரின் வரிகளில்..**

**ஆக்ஸிஜன் தொழிற்சாலை**

*இரவெல்லாம் மரங்கள்*
*வெளியேற்றிய ஆக்ஸிஜன்*
*அதிகாலை இருளில்*
*பூங்கா எங்கும் வியாபித்திருக்க*
*மகிழ்ச்சியில் திக்குமுக்காடின நுரையீரல்கள்*

**அதே அறையின் இன்னொரு பகுதியில் "கொரோனா காலத்தில் ஒரு நடைப்பயணம்" கவிதையில்-**

*"கொரோனாவிலிருந்து சென்னையைப் பாதுகாக்க*
*தனக்குத் தாளிட்டுக் கொண்டது டவர் பூங்கா"*

……

*பூங்காவின் நாற்புற மதிற்சுவர் வலம் வந்து*
*நிழற்சாலைகளை ரதவீதிகளாக்கி*

*பூங்காவை கோவிலாக்கும் முயற்சியில் சில நடைப்*
*பயிற்சியாளர்கள்*

……

*நடைப் பயிற்சி செய்வோர் அரவம் கேட்காததால்*
*விடியவில்லை என தூங்கிக் கொண்டிருந்தன மரங்கள்*

**என்று கிண்டலுக்கும் குறைவில்லை. "ஆக்ரோஷம்" என்ற தலைப்பின் கீழ் கவிஞர் சொக்கலிங்கம் யதார்த்த மனநிலையையும் கோடிட்டுக் காட்டுகிறார் - பின்வருமாறு:**

*அதிகாலை ஐந்து மணி*

*கைகளை ஆக்ரோஷமாய் முன்னும் பின்னும் ஆட்டிக்கொண்டும்*

*அவ்வப்போது தனித்தனியாய் சுழற்றிக் கொண்டும்*

*வேகவேகமாய் நடைப்பயிற்சி செய்து கொண்டிருந்த*

*நடுத்தரவயது  மதிக்கத் தக்கவரின்*

*முதல் ரத்தப் பரிசோதனை முடிவுகள்*

*நேற்று இரவு அவரை வந்தடைந்திருக்கும் போல.*

**கடனா நதிக் கரையில் அமைந்துள்ள அழகிய கிராமம் சிவசைலம். கவிஞரின் சொந்த ஊரான ஆழ்வார்குறிச்சி அதன் அருகில் உள்ளது. நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு அங்கு நடைபயணம் செல்கிறார் நமது கவிஞர். ஓர் அழகிய கவிதை பிறக்கிறது. பெரிய கவிதை. அஞ்சறைப்பெட்டி நூலை வாசிப்பவர்கள் முழுமையாகப் படித்து இன்புறவேண்டுமென்ற நோக்கத்துடன் சில வரிகளை மட்டும் அணிந்துரையில் கோடிட்டுக் காட்டுகிறேன்.**

*சிவசைலம் சாலையில் ஒரு நடை பயணம்*

*நாற்பதாண்டுகள் கழித்து*

*அடையாளம் கண்டுகொண்ட*

*இரு புறத்து புளிய மரங்கள்*

*இலைகளை மெதுவாய் அசைத்து*

*ரம்மியமாய் வரவேற்க*

*சாலையெங்கும் வேப்பம்பூக்கள்*

*நிரப்பியிருந்த நறுமணம்*

*இயற்கை கிருமி நாசினியாய்*

*புளியமர இலைகளின் அசைவுகள்*

*அனுப்பிவைத்த காற்றின் உதவியோடு*

*உடலெல்லாம் பரவி சிலிர்க்கச் செய்ய*

**தென் மாவட்டங்களில் "அகராதி பிடித்தவன்" என்று ஒரு சொற்பிரயோகம் உண்டு. அதாவது எல்லாவற்றிலும் தனக்கென ஒரு கருத்து வைத்திருந்து அதைப் பகிரங்கப்படுத்தத் தயங்காதவர்களுக்கான "பட்டப் பெயர்" அது.**

அந்த வர்ணனைக்கு என் அகராதியில் "அகராதி படித்தவன்" என்று அர்த்தம். கவிஞர்களும், என்னைப் போன்ற பத்திரிகையாளர்களும் ஒரு வகையில் இந்த ரகம் தான். சமீப காலமாக இப்படிப்பட்டவர்களை "தேச விரோதிகள்" என்றும் அழைக்கத் துவங்கி இருக்கிறார்கள்.

சொக்கலிங்கம் அவர்களின் படைப்பான "அஞ்சறைப் பெட்டி" கவிதை நூலில் கீழ்க்கண்ட கவிதைகள் கொஞ்சம் "அகராதி" தான். இருப்பினும் தமிழ் கூறும் நல்லுலகம் கவிஞர்களுக்கு அதற்கான உரிமையைக் காலங்காலமாய் வழங்கி இருக்கிறது.

**காத்திருப்பு**

*மருத்துவமனை துவங்கி எமலோகம் வரை*
*மயானம் வழியாக*

**மனிதகுல தொற்றுகள்**

*சாதிபேதம்*
*நிறவெறி*
*மதவாதம்*
*மொழி வெறி*
*ஏற்றத் தாழ்வு*
*மற்றும் கொரோனா*

"மை" என்ற தலைப்பில்

"*விரல் நுனியில் எழுதிவிடுகிறது*
*ஐந்தாண்டுத் தலையெழுத்தை*" என்ற வரிகளும்,

"பட்டாம்பூச்சி" என்ற தலைப்பில்

*பட்டும் படாமல்*
*வந்தமர்ந்த பட்டாம் பூச்சியின்*
*வண்ணங்களில் மனதைப் பறி கொடுத்தது மலர்*
*தேன் பறிபோகுமென அறிந்திருந்தும்.*

என்ற வார்த்தைகளிலும் கவிஞரின் சமூகப் பார்வை தெளிவாகிறது. "கடிதொச்சி மெல்ல" எறிந்திருக்கிறார் கவிதை அம்புகளை. புரிய வேண்டியவர்களுக்குப் புரிந்தால் சரி.

தமிழர்களின் நீர் மேலாண்மைத் திறன் மிகவும் பழமையானது. சங்க காலம் தொட்டே நீரைச் சேமிக்கும் உத்திகளையும், கலைகளையும் நாம் அறிந்து வைத்து இருந்தோம். எந்த வடிவில் ஏரி இருக்க வேண்டும் என்பதைக் கூறுகிறார் சங்கப் புலவர் கபிலர்

*அறையும் பொறையும் மணந்த தாய*
*எண்நாள் திங்கள் அணைய கொடுங்கரைத்*
*தென்நீர்ச் சிறுகுளம் கீழ்வது மாதோ*
*தேர்வன் பாரி தன் பறம்பு நாடே*

கரை நீளம் குறைவாகவும் ஆனால் கொள்ளளவு அதிகம் கொண்டதுமான அமைப்பு பெற எட்டாம் பிறை வடிவத்தில் (எண்நாள் திங்கள்) ஏரி இருக்க வேண்டுமாம்.

"சிறுபஞ்சமூலம்" என்ற நூலில் ஆசிரியர் காரியாசான், ஏரிகள் அமைக்கப்பட வேண்டிய வரைபடத்தையே தருகிறார்.

*குளந்தொட்டு கோடு பதித்து, வழி சித்து*
*உளந்தொட்டு உழவயலாக்கி - வளந்தொட்டு*
*பாடு படுங்கிணற் றோடென்றிவ்வைம் பாற்*
*கடுத்தான் ஏகுசுவர்க்கத் தினிது*

ஒரு ஏரி கீழ்க்கண்ட 5 அங்கங்களுடன் இருக்க வேண்டும்.

1. குளம் (குளம் தொட்டு) 2. கலிங்கு (கோடு பதித்து) 3. வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் போகும் கால்கள் ஆகிய வழிகளை அமைத்தல் (வழி சித்து) 4. பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மூலம் ஆய்க்கட்டுப் பகுதிகளை உருவாக்குதல் (உழுவயலாக்கி) 5. பொதுக்கிணறு அமைத்தல் (கிணறு).

முதல் நான்கு அங்கங்களையும் நெல்லை, தஞ்சை மாவட்டங்களில் நான் வெகுவாகப் பார்த்து இருக்கிறேன். நீர் குறைவாக இருக்கும் போது மதகு மூலம் தண்ணீர் பாய்ச்சுவது தண்ணீரை விரயமாக்கும். அந்த நேரங்களில் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவது சிறந்த நீர் மேலாண்மை வழி. அதற்குப் பொதுக் கிணறு தேவை.

அந்த இடத்தில் நாம் கோட்டை விட்டு விட்டோம். இது "போர்வெல்" யுகம். சிறு வயதில் கண்டு, ரசித்துக் குளித்து மகிழ்ந்த பொதுக் கிணறுகளும், அவற்றைச் சாகுபடிக்குப் பயன்படுத்திய நுட்பமும் இன்று வாய் பேச இயலாதோன் கனவாகி விட்டது. .

மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றை இணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்ற கோட்பாடு தற்போது உலகெங்கும் பரவி வருகிறது. இந்த சிறந்த நீர்மேலாண்மை உத்தி, சங்க காலத் தமிழகத்தில் இருந்திருக்கிறது.

கவிஞர் சொக்கலிங்கத்தின் நான்கே வரிகளில் இத்தனையும் என் நினைவில் அலை மோதின. மழை நீரை வீணாக்குவது பற்றிய இந்த விழிப்புணர்வுக் கவிதை அருமை.

**மழை நீர்**

*கார் காலத்தில்*
*நான் வீணடிக்கப்படுவது கண்டு*
*கோடையில் வழிவிட மறுக்கும்*
*சூரிய நண்பன்*

கார் காலத்தில் தண்ணீரை வீணடித்து விட்டதால் தான் கோடை வெப்பம் கூடுகிறது என்கிற கவிஞரின் பார்வை நூற்றுக்கு நூறு சரி.

தாயக்கட்டை என்பது சிறு வயது விளையாட்டு. குறுக்கும் நெடுக்குமான கோடுகளாலான கட்டத்தின் முன் அமர்ந்து பகடை உருட்டி பழம் பெறுவது தான் இறுதி வெற்றி. அநேகமாக இன்றைய குழந்தைகள் அதை மறந்தே போய் இருப்பார்கள்.

தாயம் விளையாட உருட்டும் பகடை முன்பெல்லாம் பித்தளையில் செய்யப்பட்டு இருக்கும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தின் தொலை தூரக் கிராமம் ஒன்றில் தங்கி விவசாயம் பார்த்தேன். அப்போது அங்கு சந்தையில் வெள்ளி உலோகத்தால் செய்யப்பட்ட பகடைக் கட்டைகளை வாங்கி சிறு வயதுக்கு மீண்டும் போனேன்.

ஆனால் நமது கவிஞரோ "தாயக் கட்டைப் பகடையின் பயணம் தீர்வு நோக்கியது" என்கிறார் .

**தாயம்**

*தாயக் கட்டைகளின்*
*அங்கப் பிரதட்சனங்கள்*
*தீர்வு நோக்கி*

ஆஹா, அற்புதம்! ‘‘பழம்’’ பெற்ற ஐந்தெழுத்து விநாயகனும் தீர்வை நோக்கிய முருகனின் பயணத்திற்குத் தானே வித்திட்டான்?

அஞ்சறைப் பெட்டியின் அறைகளில் உள்ள அனைத்துமே உடல் நலனுக்கும் ஏற்றவை.. ‘‘காதல்’’ அறையில் பல கவிதைகள் உள்ளத்தின் நலனுக்கும் வழி தேடுகின்றன.

"மயக்க மருந்து" என்ற தலைப்பில்

*நோய் தீர்க்க*
*மயக்க மருந்து அளிக்க வேண்டுமென்றனர்*
*உன்னைச் சிரிக்கச் சொன்னேன்*

என்ற வரிகள் அதற்குத் தக்க எடுத்துக்காட்டு.

*"உவமானம் இல்லாத*
*உவமேயம் நீ"*

என்று கவிஞரே ஒரு விடையும் கண்டுபிடிக்கிறார்.

அண்ணலும் நோக்கி அவளும் நோக்கி கண்களில் கலந்து கருத்தொருமித்துத் திருமணம் முடித்தபின் இயல்பாக எழும் கருத்து வேற்றுமைகளை "காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்" என்று வர்ணிக்கும் கவிஞரின் பார்வையே தனி.

**காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்**

*புவியீர்ப்பு விசை போக்கில் விடப்பட்ட*
*பாத்திரங்கள், கரண்டிகள், சமையலறை சப்தங்கள்*
*உணர்த்துகின்றன*
*ஒரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்*
*தீவிரமடைந்து கொண்டிருப்பதை*

ஈயம் பூசுதல் என்பது மரபு சார்ந்த தொழில். அன்றாடம் பயன்படுத்தும் செம்பு மற்றும் பித்தளைப் பாத்திரங்களில் புளி சேர்த்துச் சமைத்த பொருட்களைச் சேமித்து வைத்தால் நாளடைவில் பச்சைக் களிம்பு படிந்து உணவே நஞ்சாக்கிவிடும். அதைத் தடுக்கப் பாத்திரங்களில் ஈயம் பூசினார்கள். இந்தியாவின் "உலோகவியல்" உன்னதம் அது.

பொன், வெள்ளி, செம்பு, பித்தளை மற்றும் இரும்பு போன்ற உலோகங்கள் அன்றாட உபயோகத்தில் பொதுவாக இடம் பெறும். பொன் மற்றும் வெள்ளி விலை உயர்ந்தவை. ஆபரணங்கள் செய்ய உதவும். செம்பு சூடு தாங்கி நெடுங்காலம் நிற்கும். ஆனால் களிம்பு பிடிக்கும்.

பித்தளையில் செய்யும் பாத்திரங்கள் உறுதியானவை. அடுப்பில் சூடு தாங்கும். எனினும் களிம்பேறும் தன்மையுடையது. அதைத் தவிர்க்கவே ஈயம் பூசினார்கள். இன்று பித்தளைப் பயன்பாடு குறைந்து விட்டது. முன்பெல்லாம் ஈயம் பூசி வாழ்வு நடத்துபவர்கள் ஊர்களில் முகாமிடுவார்கள். கிராம வாழ்க்கையில் "ஈயம் பூசுதல்" என்ற மாபெரும் அதிசயத்தைக் கண்டு வியக்காத சிறார்களே இருக்க முடியாது. கலாய் பூசுதல் என்பது அதுதான். சென்னை மொழியில் "கலாய்த்தல்" என்றால் "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல்."

ஆனால் நமது அருமைக் கவிஞர் காதல் கலாய் பூசுகிறார். சிறு வயதில் பார்த்த "ஈயம் பூசுதல்" அவரது ரசிக்கத் தகுந்த குறும்பு மொழியில் காதல் கவிதையாய் மலர்ந்துள்ளது!

**கலாய் பூசுகிறேன்**

*கலாய் பூசுகிறேன்*
*உன் நினைவுகள் நிரம்பிய*
*என் மனதிற்கு*

*அவை நிகழ்த்தும்*
*வேதியியல் மாற்றங்களால்*
*அவை அழியாதிருக்க*

மனம் எனும் பாத்திரத்தில் வைக்கப்பட்ட நினைவுகளில் களிம்பு படிந்துவிடக் கூடாது அல்லவா?

சங்க காலக் கவிதைகளில் கூட அரசியல் இடம் பெற்று இருக்கிறது. அது தான் பெருமைக்குரிய தமிழ் மரபு. அந்த வகையில் சம காலக் கவிதைகளில் அரசியல் கண்டிப்பாக இடம் பெற வேண்டும் என்றே எப்போதும் நான் கருதுவேன்.

கவிதை என்பதை சமகாலத்தின் எதிர்ப்புக் குரலாக ஆவேசமாகவும் வெளிப்படுத்தலாம். மென்மையாகவும் கூறலாம். நமது கவிஞர் சொக்கலிங்கம் இரண்டாவது வகை.

மொழியின் வழியாகச் சித்தரிக்கப்படுகிற விநோத உலகமே கவிதை. அது உருவாக்கிடும் காட்சிகள் அற்புதமானவை. பல நேரங்களில் அது உணர்த்தும் உண்மைகள் மனதைச் சுடுபவை. நண்பர் கவிஞர் சொக்கலிங்கம் தனது "அஞ்சறைப் பெட்டி" கவிதை நூல் மூலம் இதைச் சாதித்து இருக்கிறார்.

வாழ்க! வளர்க!

அன்பன்


ஷ்யாம்

மூத்த பத்திரிகையாளன்
சென்னை
21.06.2021


# அஞ்சறைப் பெட்டி

## அறைகள்


**பூங்கா**




**காதல்**




**இயற்கை**



**மெரினா**



**சமூகம்**



# அஞ்சறைப் பெட்டி

## அறைகள்


1. பூங்கா (18) ....................................................................... 17


2. காதல் (32) ....................................................................... 27

3. இயற்கை (24) ...................................................................... 37

4. மெரினா (9) ....................................................................... 49

5. சமூகம் (81) ....................................................................... 55


முதல் நூல் பஞ்சவர்ணகிளி குறித்து ........................ 83

# அஞ்சறைப் பெட்டி

## அறை ஒன்று

# பூங்கா (18)



## பூங்காவின் சுவரோவியங்கள்

நடந்து கடக்கின்றன இரைகள்
கையறுநிலையில் சிங்கங்களும், புலிகளும்

## பசி

பசியோடு அணில்கள் கொறிக்காது விட்ட
கொய்யாப் பழங்கள்
குவிந்திருந்தன தள்ளு வண்டியில்
கொய்தவன் பசி தீர்த்து, விற்பவன் பசி தீர்க்க

## அங்கப்பிரதட்சணம்

நடைப் பயிற்சியில் இரு மருமகள்கள்
அவர்களின் காரசாரப் பேச்சில்
அங்கப்பிரதட்சணம் செய்து கொண்டிருந்தனர்
அவர்தம் மாமியார்கள்

## ஆக்ஸிஜன் தொழிற்சாலை

இரவெல்லாம் மரங்கள்
வெளியேற்றிய ஆக்ஸிஜன்
அதிகாலை இருளில்
பூங்கா எங்கும் வியாபித்திருக்க
மகிழ்ச்சியில் திக்குமுக்காடின நுரையீரல்கள்

## பட்டாம் பூச்சி

பட்டும் படாமல்
வந்தமர்ந்த பட்டாம் பூச்சியின்
வண்ணங்களில் மனதைப் பறி கொடுத்தது மலர்
தேன் பறிபோகுமென
அறிந்திருந்தும்

## அஸ்திவாரம்

மரக் கிளைகளில்
அமர்ந்து கொண்டும், தொங்கிக் கொண்டும்
பறவைகளின் கூடுகளாய் வீடுகள்
அஸ்திவாரமின்றி

## மறதி

அரக்கப்பரக்க உடற்பயிற்சி
எளிதில் குறைய மறுக்கும் உடல் எடை
இவை யாவும் நினைவிற்கு வரவேண்டும்
அடுத்த முறை பன்னீர் பட்டர் மசாலா உண்கையில்

## பூங்காவில் காலை ஐந்து மணி

மரத்துப் பறவைகளின் ரீங்காரக் கச்சேரி
சென்றடையவில்லை
பரபரப்பாய் ஆரோக்கியம் தேடுவோர் காதேறி

## பசுத்தோல் போர்த்திய புலி

கரையோரத்து மரங்கள் உதிர்த்த இலைகளை
தம்மீது பச்சைப் போர்வையாய் மிதக்கவிட்டு
அரவமின்றி காத்துக் கொண்டிருந்தது
பூங்காவின் சிறிய குளம்
பெண்ணின் மனது போல
தன் ஆழத்தை வெளிக்காட்டாமல்

## இறகுப் பந்து

காற்றை அடித்து அடித்து
பறவையாய் பறந்த நினைவுகளோடு
அடி வாங்கிப் பறந்து கொண்டிருந்தது
இங்கும் அங்குமாய்
இப்போதும்
விரித்திருக்கும் வலையில் சிக்காது

## மனம் ஒரு குரங்கு

மனத்துக் குப்பைகளையும் போட்டுவிட்டு
மாமனிதராய் பூங்காவைவிட்டு வெளியேறுமாறு
திறந்திருந்த கண்களால் கூறியவாறே
ஆங்காங்கே நின்று கொண்டிருந்தன
பிளாஸ்டிக் குரங்கு பொம்மைகள்
குப்பைத் தொட்டி ஏந்திய கைகளோடு
மனிதர் மனது அறிந்த மமதையில்

## குத்துச் சண்டை

பூங்காவில்
ஓட்டமும் உடற்பயிற்சிகளும் முடித்து
உடம்பை நன்கு முறுக்கேற்றி
ஒருவர் பின் ஒருவராக
பயிற்சியாளரின் குத்துச் சண்டை குத்துகளை
அடி வாங்காது லாவகமாய் தடுக்கும் பயிற்சியில்
விரைவில் மணமகன்களாகப் போகும் இளைஞர்கள்

## கானம்

வயிற்றிலிருந்து வாத்தியக் கருவிகள்
இசைக்கத் துவங்கின
பறவைகளின் வாய்
ஒலிபெருக்கியானபோது

## ஆக்ரோஷம்

அதிகாலை ஐந்து மணி
கைகளை ஆக்ரோஷமாய் முன்னும் பின்னும்
ஆட்டிக் கொண்டும்
அவ்வப்போது தனித்தனியாய் சுழற்றிக் கொண்டும்
வேக வேகமாய் நடைப்பயிற்சி செய்து
கொண்டிருந்த
நடுத்தர வயது மதிக்கத் தக்கவரின்
முதல் ரத்தப் பரிசோதனை முடிவுகள்
நேற்று இரவு அவரை வந்தடைந்திருக்கும் போல

## யானை

வாலைப் பிடித்து இழுத்துக்கொண்டும்
கால்களின் நடுவே இங்கும் அங்குமாய் ஓடிக்கொண்டும்
தும்பிக்கையில் தொங்கிக் கொண்டும்
தந்தை உதவியோடு முதுகில் ஏறி அமர்ந்து கொண்டும்
விளையாடிய சிறுவனை
ஆடாது அசையாது
ஒரே இடத்தில் நின்று கொண்டு
சந்தோசத்தில் குதூகலிக்கச் செய்தது

கருங்கல்லில் செதுக்கப்பட்டு
கம்பீரமாய் நின்றுகொண்டிருந்த யானை

## கமாண்டோ

புழு
தன் வாய் சுரந்த பசையை
மரக்  கிளையில் ஆரம்பித்து
செங்குத்தாய் கம்பிக்கயிறாக்கி
வழுக்கிக் கொண்டு  கீழிறங்கி
கீழே நடந்து  சென்றவர்
உச்சந் தலை சென்றடைந்தது

ஹெலிகாப்டரில் இருந்து
கயிற்றால் மொட்டை  மாடியில் இறங்கும்
கமாண்டோ போல

# கொரோனா காலத்தில் ஒரு நடைப்பயணம்

கொரோனாவிலிருந்து சென்னையைப் பாதுகாக்க
தனக்குத் தாளிட்டுக் கொண்டது டவர் பூங்கா

நடைப்பயிற்சி செய்வோர் அரவம் கேட்காததால்
விடியவில்லை என தூங்கிக் கொண்டிருந்தன
மரத்துப் பறவைகள்

ஆக்சிஜனை உற்பத்தி செய்துகொண்டிருந்தன
பூங்காவின் மரங்கள் சூழலுக்கேற்ப முழுவீச்சில்

பூங்காவின் நாற்புற மதிற்சுவர் வலம்வந்து
நிழற்சாலைகளை ரதவீதிகளாக்கி

பூங்காவை கோவிலாக்கும் முயற்சியில் ஒரு சில
நடைப்பயிற்சியாளர்கள்

பூங்கா வெளியே உணவகத்து மேஜைகளில்
கம்பீரமாய் அமர்ந்திருந்தன நாற்காலிகள்

திடீரென தன் தெருவில் நடைப்பயிற்சியாளர்களைக்
கண்ட ஆச்சரியத்தில்

வாயிலில் வாயில் பற்பசை தூரிகையோடு ஒரு
வயோதிகர்

வாழ்வா வாழ்வாதாரமா விவாதித்துக் கொண்டே
நடைப்பயிற்சியில் நால்வர்

உடம்பின் அயர்ச்சி ஒருமணிநேரம் முடிந்ததை
உணர்த்த என் நடைப்பயிற்சியை முடித்தேன்

# ரம்மியம்

மே மாதம் அதிகாலை

கொரோனா அளித்த
கோடை விடுமுறையில்
குதூகலித்துக் கொண்டிருந்தன
பூங்காவின் மரங்கள்

குதூகலம் உதிர்த்த
வண்ண வண்ண மலர்கள்
மஞ்சள்
சிகப்பு
வெண்மை நிறங்களில்
தஞ்சமடைந்திருந்தன
பூங்காவின் கருப்பு தார்சாலைகளில்
கண்கவர் ஓவியங்களாய்

ஓவியங்களை
ரசித்துக் கொண்டிருந்தது காற்று
தான் வீச மறந்து


ஓவியங்களைக் கண்ட
மேகங்களின் ஆனந்தக் கண்ணீர்
சூரியக்கற்றைகளை பொத்துக்கொண்டு
சில நிமிட சாரல் துளிகளாய்
மலர்களை மட்டும் நனைக்கும் அளவிற்கு

இயற்கை படைத்திருந்தது
"ரம்மியம்" என்ற வார்த்தைக்கு
அழகான ஒரு காட்சியை

# அஞ்சறைப் பெட்டி

## அறை இரண்டு

# காதல் (32)



## கரு விழிகள்

நம் கருவிழிகள் நேர்கோட்டில்
நடக்கத் துவங்கினேன் தாறுமாறாய்

## காதல்

கண்கள் பேசத் துவங்கின
வாய் வாயடைத்துப் பார்த்தது

## ஆடு புலி ஆட்டம்

சளைக்காது ஆடுகிறான் மனைவியோடு
முடிவு என்னவென்று அறிந்திருந்தும்

## உவமேயம்

உவமானம் இல்லாத
உவமேயம் நீ

## நினைவு

நீ சென்றதும்
நான் நடந்தேன் என் வீடு நோக்கி
மழையோடு
உன் நினைவுகளில் நனைந்து

## ஐயந்திரிபு

ஊசலாட்டமாய்
ஆடித்திரிந்த உன் கண்களில்
கலந்திருந்த காதலை
உணர்ந்துவிட்டேன் ஐயந்திரிபு இன்றி
இன்னும் ஏன் கண்டும் காணாததுமாய்

## உன் வரவால்

பெற்றோர், உறவினர்
நண்பர்கள், பயணிப்போர்
அனைவரும் காணாது போகின்றனர்
தெருவுக்குள் நீ நுழைகையில்

## காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்

புவியீர்ப்பு விசை போக்கில் விடப்பட்ட
பாத்திரங்கள், கரண்டிகள், சமையலறை சப்தங்கள்
உணர்த்துகின்றன
ஒரு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம்
தீவிரமடைந்து கொண்டிருப்பதை

## அட்சய பாத்திரம்

வற்றாத எதிர்விளைகள்
அகஸ்மாத்தாய் உன்னிடமிருந்து

## கண் மை

அழகிய உன் கண்களை
கண்பட்டு விடாது காக்கும்
இந்த திருஷ்டி பரிகாரம்

## மயக்க மருந்து

நோய் தீர்க்க
மயக்க மருந்து அளிக்கவேண்டுமென்றனர்
உன்னை சிரிக்கச் சொன்னேன்

## கொலுசு

இசைக்கருவி ஆபரணம் என்ற பெயரில்
பாதங்கள் இசைக்கின்றன புதுப்புது ராகங்களை
அடுத்தவர் அறியாது அழைக்கிறது
அழைப்புமணியாய்
கோபமும் காதலும் தனித்தனி மெட்டுகளில்
மனதைக் கிறங்கடித்துவிடுகிறது
கால்களை சுற்றியபடியே

## மொழி

அகராதிகளால் தொகுக்க முடியவில்லை
கண்கள் பேசும் மொழியை

## இதயத் துடிப்பு

நடந்து செல்லும் என்னை
மெதுவாய் நீ கடக்கையில்
நொடிகளில் என் இதயம்
நூறு மீட்டர் ஓடியதுபோல்
வேகமாய் துடித்து விடுகிறது

## தேடல்

உன் கண்களின் தேடல்
காற்றில் எழுதும் கவிதைகளை
சுவாசிப்பதற்காகவே
எப்போதும் நான்
உன் பார்வை வளையத்திற்கு அப்பால்

## நடிப்பு

நடிக்கத் தெரியவில்லை
உன் கண்விழிகளுக்கு
பார்த்தும் பாராததுமாய்
அவை அசைந்ததை
நான் பார்த்துவிட்டேன்

## எண்ணங்கள்

உன்னை நீ அறிந்து கொள்வாய்
என் எண்ணங்களைப் புரிந்து கொண்டால்

## அம்பன்கொடி**

அம்பன்கொடியில் தொங்கும் ஊஞ்சலானது
என் மனம்
உன் ஒரு நொடிப் புன்னகையால்

*****புதர்களிலும், தரிசு நிலங்களிலும் வளரும்.
மூன்று நான்காகப் பின்னிப் பிணைந்து
காணப்படும் ஒரு வகைச் செடி***

## அஞ்சறைப்பெட்டி

வீரியங் குறையாது விதவிதமாய் எண்ணங்கள்
மனதென்ற அஞ்சறைப் பெட்டியிலிருந்து

## அம்புறாத்தூணி**

அம்புறாத்தூணிகளாய் உன் கண்கள்
போட்டுவிட்டன என் நெஞ்செங்கும் துளைகள்

****அம்பு வைத்துக் கொள்ளும் கூம்பு வடிவக் கூடு*

## அவதானிப்பு**

உன் அவதானிப்பு
எச்சரிக்கிறது
தொடரப்போகும் கவனிப்பை

****கூர்ந்து கவனித்தல்*

## ஆராய்ச்சி மணி

எச்சரிக்கை ஒலி
உச்சஸ்தாயியில் காதில் விழ

மனைவியால் கண்டுபிடிக்கப்பட்டது
எந்த தவறென்ற
ஆராய்ச்சியில் இவன்

## ஆடுகளம்

வீடு ஆகிவிடுகிறது ஆடுகளமாய்
மனைவிக்கு கோபம் வருகையில்

## இளவேனில்

உன் இளவேனில் புன்னகையில்
என்னை மறந்த எனக்கு
தொடரப்போகும் கடுங்கோடையும்
மறந்து போனது

## உண்டி வில்

பார்வையால்
சுண்டி இழுக்கிறாய்
மனம்
முழுக்க காயங்கள்

## கடவுச் சொல்

உன் மனம் புக
கடவுச் சொல் கேட்டால்
கடுஞ் சொற்களாய் உன் பதில்

## கண்கட்டு வித்தை

கண்கட்டு வித்தையென
உன் கண்கள் காட்டின வித்தை
லயித்துப் பார்த்த என் கண்கள்
துறந்தன தூக்கத்தை

## களவாணி

களவு போக விடு உன் மனதை
களவாணியாகக் காத்துக் கொண்டிருக்கிறேன்

## குடைவரைக் கோயில்**

உனக்காக
என் மனதில்
என் எண்ணங்கள் குடைந்துவிட்டன
ஒரு குடைவரைக் கோயில்
சற்றும் மழுங்காது

***பாறையைக் குடைந்து உருவாக்கிய கோயில்*

## கலாய் பூசுகிறேன்**

கலாய் பூசுகிறேன்
உன் நினைவுகள் நிரம்பிய
என் மனதிற்கு

அவை நிகழ்த்தும்
வேதியியல் மாற்றங்களால்
அவை அழியாதிருக்க

**_ஈயம் பூசுதல்_

## கவராயம்**

கவராயத்தில் மாட்டப்பட்ட
பென்சிலைப் போல்
உன்னைச் சுற்றியே வட்டமடிகிறது
என் மனது

**_வட்டம் வரைய உதவும் கருவி_

## குடலை**


குடலையானது என் மனது
பறித்துப் போட்ட உன் நினைவுகளால்

**_பூக்கள் பறித்து போட்டுக்கொள்ள ஓலையால் பின்னப்பட்ட நீள் உருண்டை வடிவான கூடை_

# அஞ்சறைப் பெட்டி

## அறை மூன்று

# இயற்கை (24)



## தட்டான் பூச்சி

தோட்டத்து
டுரோன்

## நத்தை

வீட்டோடு ஒரு புலப்பெயர்ச்சி
மெதுவாய் ஊர்ந்து ஊர்ந்து

## தேன் கூடு

கல்லெறியில் களவு போகும்
தேனீக்களின் லாக்கர்

## வடகிழக்கு பருவ மழை

தன் வழியே பயணித்தது ஆறு
வீடுகள் தலை குளித்தன

## வண்டு

இனிக்கத் துவங்கியது மாங்காய்
வண்டு துளைக்கத் துவங்கியதும்

## மண் வாசனை

மழைத்துளியின் ஸ்பரிசம்
மண்ணின் சிலிர்ப்பு

## துரத்தல்

துரத்துவது யாரென்றறியாது
தப்பிக்கும் முனைப்பில்
அதிவேகமாய் பயணிக்கும் புயல் காற்றை
கூரைகள் துறந்து பார்த்தன குடிசைகள்

## புயல்

கருத்தரிக்கும் முன்பே
பெயரிடப்படுகிறது
பாலினக் கவலையின்றி
அழிப்பதற்காகவே பிறப்பதால்

## மழை நீர்

கார் காலத்தில்
நான் வீணடிக்கப்படுவது கண்டு
கோடையில் வழிவிட மறுக்கும்
சூரிய நண்பன்